அது 7–ஐ தாண்டி இருக்கின்றது. கேட்டதெல்லாம் தருகின்ற இந்த ஆட்சி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தலைமையில் இருக்கின்ற ஆட்சி. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வி குறித்து கள ஆய்வு செய்து சாத்தியக்கூறுகள் இருக்குமெனில் நிச்சயமாக இந்த ஆண்டே அதற்குரிய பணிகள் துவங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 101, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

101—

பயிற்சி மையம்

***3909—திரு. செ. ராஜேஷ் குமார்:**

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிள்ளியூர் தொகுதியில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையப் பயிற்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிள்ளியூர் தொகுதியில் போட்டித் தேர்வுக்கான இலவசப் பயிற்சி மையம் அமைப்பது குறித்து அரசின் ஆய்வில் தற்போது இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தினைப் பொறுத்தவரையில், சென்னைக்கு அடுத்தபடியாக 91 விழுக்காடு

2022 ஏப்ரல் 12]

கல்வி அறிவு பெற்ற மாவட்டம். இம்மாவட்டத்தில் சுமார் 2,40,000 இளைஞர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் அரசு வேலை வேண்டி பதிவு செய்துள்ளார்கள். தமிழ்நாட்டில் பல ஆண்டுகளாக வேலைவாய்ப்பு அலுவலகம்மூலம் அரசுப் பணிகளுக்கு பணியாளர்கள் தேர்வு செய்யப்படவில்லை. தற்போது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் TNPSC Group–II தேர்வுக்கு சுமார் 10 இலட்சத்து 50 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளார்கள். அதில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் சுமார் 50,000 பேர் விண்ணப்பித்துள்ளனர். TNPSC Group–IV தேர்வுக்கு சுமார் 15 இலட்சம் பேர் விண்ணப்பம் செய்யவுள்ளதாகத் தெரிய வருகிறது. இதில் கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து சுமார் 75,000 பேர் விண்ணப்பிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் படித்த வேலையில்லாப் பட்டதாரிகள், பட்டயதாரிகள் (diploma holders) மற்றவர்கள் அனைவரும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் நடைபெறும் போட்டித் தேர்வினை எதிர்நோக்கியுள்ளனர். ஆனால், போட்டித் தேர்வினை எதிர்கொள்ள அரசு சார்பில் போதிய பயிற்சி மையங்கள் இல்லை. கன்னியாகுமரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் ஒரு நாளைக்கு சுமார் 70 நபர்கள் மட்டுமே பயிற்சி பெற்று வருகின்றனர். இதனைத் தவிர இம்மாவட்டத்தில் வேறு அரசுப் பயிற்சி நிலையம் இல்லை. இந்நிலையைக் கருத்தில்கொண்டு, எதிர்கால இளைஞர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றிட கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (TNPSC) போட்டித் தேர்வுக்கான பயிற்சி மையம் அமைக்க வேண்டும் என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத்தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்கள், ஏற்கெனவே, 4 துணைக் கேள்விகள் கேட்டிருக்கிறீர்கள். உங்களை நான் அனுமதித்திருக்கிறேன். ஏற்கெனவே ஒரு கேள்விகூட கேட்காத, ஒரு மூலக் கேள்விகூட கேட்காத உறுப்பினர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து, பார்த்துத்தான் அனுமதிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. டி.கே.ஜி. நீலமேகம், திரு. ஆர்.பி. உதயகுமார்

ஆகியோர் இன்றைக்குத்தான் முதல் முறையாக கேள்வி கேட்டார்கள். (குறுக்கீடு). அதற்காக உட்கார்ந்துகொண்டே பேசுவதெல்லாம் நல்ல பழக்கம் இல்லை. நீங்கள் senior Member. முற்பகல் 10–45–க்கு வந்திருக்கிறீர்கள். வந்தவுடன் கேள்வி கேட்க வேண்டுமென்றெல்லாம் நினைக்கக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள் அம்மா. நின்றுகொண்டே (குறுக்கீடு) என்னுடைய அனுமதி இல்லாமல் பேசாதீர்கள். நீங்கள் senior Member. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) 4 முறை பேசியிருக்கிறீர்கள். 4 முறை துணைக் கேள்விகள் கேட்க அனுமதி தந்திருக்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன புள்ளிவிவரம் ஓரளவுக்கு எங்களுக்கும் தெரிந்திருக்கிறது. பலவகைகளில் அந்த Data based Governance, அதாவது தகவல் அடிப்படையில் மேலாண்மை செய்வது, அரசாங்கம் நடத்துவது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதல் ஆளுநர் உரை மற்றும் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திலிருந்து கூறிக்கொண்டேயிருக்கிறார். அதற்கேற்ப தொடர்ந்து தகவல் எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதில், கன்னியாகுமரியில் ஒரு தனி சூழ்நிலை இருப்பது இன்றைக்கு தெளிவாகத் தெரிய வருகிறது. இருப்பதிலேயே, கூடுதல் literacy, கூடுதல் நிர்வாகங்கள், கூடுதல் graduates, குறைவான வேலைவாய்ப்பு அங்கு நிலவுகிறது. இதைத் திருத்துவதற்கு தொழில்ரீதியாகவும், Economic growth அதாவது, பொருளாதார வளர்ச்சிக்காகவும், திட்டமிடுதல் குறித்து அரசாங்கம் சிந்தித்து ஆய்வு செய்துகொண்டிருக்கிறது. இந்தத் தேர்வு மட்டுமல்லாமல், பொதுவாக கன்னியாகுமரி மாவட்டத்தில் பொருளாதார வளர்ச்சியை உருவாக்குவது குறித்து வேறொரு நாள் பேசலாம்.

TNPSC–ஐப் பொறுத்தவரைக்கும், உங்களுக்கு ஏற்கெனவே நன்றாகத் தெரியும். 2, 3 ஆண்டுகளாக தேர்வுகளை

2022 ஏப்ரல் 12]

நடத்தவேயில்லை. இதற்கு முன்பு, பல வழக்குகள் தொடரப்பட்டு, பல முறைகேடுகள், விதிமீறல்கள் என்று தீர்ப்பு வந்து, ஏற்கெனவே தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களை appointment *செய்யாமல், ரத்து செய்ய வைத்து, இப்படி எத்தனையோ வகைகளில் இதில் குளறுபடி நடந்திருக்கிறது.*

இதற்காகத்தான் இந்த நிதிநிலை அறிக்கையில் தெளிவாகக் கூறியிருக்கிறோம். 89, 90 தேர்வு model*–ல் இருந்து, வெவ்வேறு தேர்வுகளை* TNPSC *நடத்துவதற்கான திட்டம் இருக்கிறது. ஆனால், அவற்றில் சில* specialised *ஆக இருக்கின்றன; சில* general *ஆக இருக்கின்றன;* Group II, Group IV *இருக்கின்றன. ஆனால்,* Group III*–ஏ இல்லை. இதுபோன்ற வேறுபாடுகள் இருக்கின்றன.*

பல ஆண்டுகளாக இவை ஆய்வு செய்யப்படாமல் இருக்கின்றன. இன்றைக்கு இருக்கின்ற அடிப்படை பிரச்சினை, சூழ்நிலை என்னவென்றால், சுமார் **3½** *இலட்சத்திற்குமேல் காலிப் பணியிடங்கள் அரசாங்கத்தில் இருக்கின்றன. அதேசமயம் சில இடங்களில் கூடுதல் நபர்களும், சில இடங்களில் யாருமே இல்லாத சூழ்நிலையும் இருக்கிறது. அதேசமயம் இப்போது பணியில் இருப்பவர்களுக்கு ஊதியம் மற்றும் ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதே பெரிய நிதிச்சுமையாக இருக்கிறது. அதற்காகத்தான், தேர்விலிருந்து, தேர்வு* model*–லிருந்து, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குப் பயிற்சி அளிப்பதிலிருந்து,* promotion model*–லிருந்து எல்லாவற்றையும்* complete system*–ஐ மறு ஆய்வு செய்வதற்கு ஒரு குழுவை அமைக்கப் போகிறோம் என்று இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருக்கிறோம். அதற்கான முதல் கட்டப் பணியாக, ஏற்கெனவே பல நிபுணர்களுடன் கலந்து ஆலோசித்து சில தெளிவுகள் வந்திருக்கின்றன. இதையடுத்து, நாங்கள் ஒரு* deadline *கொடுத்திருக்கிறோம். 6 மாதங்களுக்குள் இந்தக் குழுவினுடைய பரிந்துரையைப் பெற்று, திட்டத்தைச் சிறப்பித்து, அதற்குப் பிறகு எந்தெந்த இடத்தில், எதை எதைச் செய்ய வேண்டுமென்பதை முடிவு செய்வோம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழிற்சாலைகள்*

இல்லாததால், தொழிற்பயிற்சி பெற்றுள்ளவர்களுக்கு வெளிநாட்டில் வேலைவாய்ப்புப் பெறுவதற்கு வசதியாக அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் Overseas Manpower Corporation Limited–ன் கிளை அலுவலகத்தை கன்னியாகுமரி மாவட்டத்திற்குள் நிறுவி, இம்மாவட்டத்தில் தொழிற்பயிற்சி பெற்ற வேலைவாய்ப்பற்றவர்கள் வெளிநாட்டில் வேலைவாய்ப்பு பெற அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Overseas Manpower Corporation Ltd., என்பது தன்னாட்சியில் இயங்கும் ஒரு நிறுவனம் என்று நினைக்கிறேன். அதனால், அதுகுறித்து தொழில் துறை அமைச்சர் அவர்களிடம் கலந்து ஆலோசித்து ஒரு முடிவு எடுக்கப்படும்.

முற்பகல் 11–05

நான் இறுதியாகக் கூற வேண்டியது, நிபுணர்கள், உதாரணத்திற்கு, பேராசிரியர் அகர்வால் அவர்கள் 17 ஆண்டுகள் U.P.S.C.–யில், 10 ஆண்டுகள் உறுப்பினராகவும், 7 ஆண்டுகள் U.P.S.C. Chairman ஆகவும் இருந்திருக்கிறார். அதேபோன்று, தமிழ்நாட்டில் இருக்கின்ற முன்னாள் T.N.P.S.C. Chairman, தற்போது இருக்கின்ற T.N.P.S.C. Chairman ஆகிய அனைவரையும் கலந்தாலோசித்து, நடவடிக்கை எடுக்கவிருக்கிறோம். ஒவ்வோர் ஆண்டிலும் பிளவு ஏற்படுகிறது. சிலர் கையைத் தூக்கியிருக்கிறார்கள். அவர்களுக்கும் நான் இப்போதே பதில் சொல்லிவிடுகிறேன். உதாரணத்திற்கு, விதிமுறை இருக்கிறது. ஈரோடு மாவட்டத்தில் உள்ள பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்றிருந்தால்தான் Probation confirm ஆகி, பிறகு promotion கிடைக்கும். இரண்டு வருடங்களாக இந்தப் பயிற்சி மையத்தை நடத்தவே இல்லை. பல்லாயிரம் பேர் அதனால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதற்கு ஒரு முடிவு காண்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மற்றும் தலைமைச் செயலாளர் ஆகியோரைக் கலந்தாலோசித்து, ஈரோடு மாவட்டத்திலுள்ள பவானி சாகர் பயிற்சி மையத்தில் பயிற்சி வகுப்புகளை நடத்தாமல், அந்தந்த மாவட்டத்திலேயே நடத்தலாம் என்று முடிவு செய்து, பயிற்சி வழங்கப்படாமல் இருந்த கிட்டத்தட்ட 15,000 பேருக்கு ஒரு வாரம் அந்தந்த மாவட்டங்களில் பயிற்சி நடத்தி, அவர்கள்

2022 ஏப்ரல் 12]

probation முடிப்பதற்கும், promotion கிடைப்பதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

அதேபோன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தலைமைச் செயலாளர் அவர்களும் பல வகைகளிலும் தனிப்பட்ட கவனம் செலுத்தி, Anna Institute of Management என்று இருந்ததை Anna Administrative Staff College என்று Apex body ஆக மாற்றி, அனைத்து Training Institutions–ஐயும் அங்கேயே கொண்டு வந்து, அங்கே I.A.S. Officers' Training, T.N.P.S.C. Training, Government Servants' Training மற்றும் அரசாங்கத்தின்மூலம் அளிக்கப்படும் அனைத்துப் பயிற்சிகளையும் அங்கேயே வழங்க ஏற்பாடு செய்து, அதற்கென்று ஒரு YouTube channel ஆரம்பித்து, எந்தெந்த வகையில் மக்களிடம் கொண்டுபோய்ச் சேர்க்கலாமோ அனைத்தையும் செய்யவிருக்கிறோம். அதனால், இது ஒரு complex subject. என்னைப் பொறுத்தவரையில், ஓர் அரசாங்கத்திற்கும், நிர்வாகத்திற்கும் நிதியைவிட மனித வளம் மிகவும் முக்கியம். இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நன்கு அறிந்ததனால், அவர் இதற்குக் கொடுக்கின்ற கவனம், நிதி, சிறப்புப் பார்வை ஆகியவற்றின்மூலம் இதை படிப்படியாகச் செயல்படுத்தி, உறுதியாக, ஒரு நிபுணர் குழுவை அமைத்து, இந்த ஆண்டு முழுமையாக ஆய்வு செய்து, ஒரு comprehensive reform, fundamental reform கொண்டு வரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ராஜேஷ் குமார் அவர்கள் குறிப்பிட்டதுபோல, இங்கிருந்து நிறைய பேர் வெளியூர்களுக்குச் செல்கிறார்கள். அவர்களை முறையாக register செய்கிறோமா, அவர்களுக்கு Training கொடுக்கிறோமா, அவர்களுக்கு insurance கொடுக்கிறோமா, அவர்கள் remittance செய்வதற்கு வழி செய்திருக்கிறோமா என்பவனவற்றின்மீது முழுமையான ஆய்வு மேற்கொள்ளப்படும். அதேபோல், வெளியூர்களிலிருந்து பலர் இங்கேயும் வருகிறார்கள். நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததுபோல், புலம்பெயர் தொழிலாளர்களுக்கு இங்கே registration செய்துகொள்ள ஏற்பாடு செய்து, அவர்களுக்கு mobile facilities வைத்து, அதே நேரத்தில் அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்படுவதோடு, யார் இருக்கிறார்கள், எங்கு இருக்கிறார்கள் போன்ற முழு தகவல்களும் நம்மிடம் இருக்கும்வண்ணம் செய்திருக்கிறோம். கடந்த முறை lockdown வந்தபோது யார், எங்கே இருக்கிறார்கள் என்றே தெரிந்துகொள்ள முடியாமல் இருந்தது. இவற்றையெல்லாம் data அடிப்படையில்,

system அடிப்படையில் சீர்திருத்த வேண்டும். இத்தகைய முயற்சிகளை பல மாதங்களாக எடுத்துக்கொண்டிருக்கிறோம். நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டவாறு 6 மாதங்களுக்குள் முழுமையான ஓர் அறிக்கையை–covering everybody like Government Servants, migrant labour, immigrant labour– இவை போன்று எல்லாவற்றையும் சேர்த்து ஒரு system–ஐ இங்கு சமர்ப்பிப்போம் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்களுடைய கேள்வி குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை தொடர்புடையது என்பதால் மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன் அவர்களும் பதில் சொல்லவிருக்கின்றார்கள். (குறுக்கீடு)

வினா வரிசை எண் 102, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி, மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

102—

தொழிற்பயிற்சி நிலையம்

***16380—திரு. செ. கிருஷ்ணமுரளி:**

மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் தொகுதி, செங்கோட்டை வட்டம், சாம்பவர் வடகரையில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதி தென்காசி மாவட்டத்தில் அமைந்துள்ளது. தென்காசி மாவட்டத்தில் 3 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும்,